## 100 நாள் வேலைத் திட்டம்: நிதி கோரி 1,600 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம்!

# ஒன்றிய பா.ஜ.க. அரசே ‘எங்கே எங்கள் பணம்’ என மக்கள் இடியென முழக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, மார்ச் 30-

100 நாள் வேலைத்திட்ட நிதியை தமிழ் நாட்டுக்கு வழங்காமல் வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து நேற்று கழகத் தின் சார்பில் 1,600 இடங்களில் ஆர்ப்பாட் டம் நடைபெற்றதையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் ஒன்றிய பா.ஜ.க. அரசே “எங்கே எங்கள் பணம்” என மக்கள் இடியென முழங்கியிருக்கிறார்கள். இனியும் தமிழ்நாட்டு மக்களை அரசியல் ரீதியாக துன்புறுத்தி மகிழும் செயலை நிறுத்தங்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

100 நாள் வேலைத்திட்ட சம்பள நிதியை விடுவிக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் நேற்று (29.03.2025) நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டங்கள் குறித்துக் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**இன்று, நூறுநாள் வேலைத்திட்டத்தில் பணியாற்றும் இலட்சக்கணக்கான கிராமப் புற மக்களுடன் தோளோடு தோள் நின்று 1,600 இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திய திராவிட முன்னேற்றக் கழகத்தி னர் ஒன்றிய பா.ஜ.க. அரசை நோக்கி “எங்கே எங்கள் பணம்?” என்ற வினாவை இடியென முழங்கியிருக்கின்றனர்.**

**கொளுத்தும் வெயிலில் பாடுபட்டவர்க ளுக்குரிய கூலியை அளிப்பதற்கான நிதி யைக் கூட மறுப்பது நிர்வாகத் தோல்வி மட்டுமல்ல, அவர்களைத் துன்புறுத்தும் செயலாகும்.**

**அடுத்தவரைத் துன்புறுத்தி இன்பம் காணும் பா.ஜ.க. அரசு, வேண்டுமென்றே நிதியை விடுவிக்காமல் தங்களைத் தேர்த லில் நிராகரித்த தமிழ்நாட்டு கிராமப்புற மக்களைத் தண்டிக்கிறது.**

**நிலுவையில் உள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப் புத் திட்ட நிதி ரூ.4,034 கோடியை உடனடி யாக விடுவியுங்கள். தமிழ்நாட்டு மக் களை அரசியல் ரீதியாகத் துன்புறுத்தி மகிழும் செயலை நிறுத்துங்கள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.3.2025) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மாநில அளவிலான உயர்நிலை விழிப்புணர்வு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில், வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் விதிகளுக்கான இயக்க நடைமுறை கையேட்டினை வெளியிட, அமைச்சர் – மருத்துவர் மா. மதிவேந்தன் பெற்றுக் கொண்டார். உடன் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்ளார்.

## தமிழ்நாட்டின் நலனே முக்கியம் என்றால்

# ‘நீட்’ தேர்வை ரத்து செய்தால்தான் கூட்டணி என பா.ஜ.க.விடம் உறுதியைப் பெற்று எடப்பாடி பழனிசாமி அறிவிப்பாரா?

## அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி!

*சென்னை, மார்ச் 30-*

*தமிழ்நாட்டின் நலன்களே முக்கியம் என்றால் நீட் தேர்வை ரத்து செய்தால்தான் கூட்டணி என்று உறுதியைப் பெற்றுக் கொண்டு பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்க தயாரா? என எடப்பாடி பழனி சாமிக்கு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி எழுப்பி யுள்ளார்.*

*இது குறித்து அமைச்சர் தங் கம் தென்னரசு தெரிவித்திருப் பதாவது:-*

*ஒன்றியத்தில் இந்தியா கூட் டணியின் ஆட்சியமைந்தால் ‘நீட் தேர்வு ரத்து செய்யப்ப டும்’ என்று கழகத் தலைவர் உறுதியளித்திருந்தார். அதே உறுதிமொழியை ராகுல் காந்தி அவர்களையும் அளிக்கச் செய் திருந்தார்.*



*டெல்லியில் மூன்று கார் களை மாற்றி மாற்றிச் சென்று ‘பிரத்தியேகமாக யாரையும் சந்திக்க வரவில்லை’ என்று சொல்லிவிட்டு இரவோடு இர வாக உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களைச் சந்தித்த எடப்பாடி பழனிசாமி அவர் களே!*

*பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட் டணி அமையும் என்று அமித்ஷா இன்றுகூடச் சொல் லியிருக்கிறார். தமிழ்நாட்டின் நலன்களே உங்களுக்கு முக்கி யம் என்றால் நீட் தேர்வை ரத்து செய்தால்தான் கூட்டணி என்று உறுதியைப் பெற்றுக் கொண்டு கூட்டணி வைக்க நீங்கள் தயாரா?.*

*இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு கேள்வி எழுப்பி யுள்ளார்.*

## மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் – மேயர் திருமதி. ஆர். பிரியா நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# 30 சாதனைப் பெண்களுக்கு ‘சூரிய மகள்’ விருது!

## நடிகர் சத்தியராஜ் வழங்குகிறார்!

## மக்கள் முதல்வரின் மனிதநேய விழா – உலக மகளிர் தின விழாவாக நடைபெறுகிறது!

*சென்னை, மார்ச் 30-*

*மக்கள் முதல்வரின் மனிதநேய விழா “உலக மகளிர் தின விழாவை 2025” முன்னிட்டு, சென்னை பெருநகர மேயர் திருமதி.ஆர். பிரியா ஏற்பாட்டில், அமைச்சர் - மாவட்ட செயலாளர் - பி.கே.சேகர்பாபு முன்னி லையில், பல்வேறு துறைக ளில் சாதனை புரிந்த 30 சாதனை பெண் களுக்கு “சூரிய மகள்” விருது வழங்கும் விழா நடைபெறுகிறது.*

*நடிகர் சத்யராஜ் அவர் கள் விருதுகள் வழங்கி வாழ்த்துரைக்கிறார்.*

*“மங்கையராய் பிறப்ப தற்கு நல்ல மாதவம் செய் திட வேண்டும்” என்று கவி மணி தேசிய விநாயகம் பிள்ளை பாடியதற்கி ணங்க மாதவம் புரிந்து பிறந்துள்ள பெண்கள் பல ரும் இன்றைய சமூகத்தில் பெரும்பாலும் சமமாக வும், சுயமரியாதை யுட னும் நடத்தப்படுவதற்கு தைரியத்தையும், நம்பிக் கையையும் ஆயுதமாகக் கொண்ட பெண்கள் இந் திய வரலாற்றில் வியக்க வைக்கும் பல்வேறு சாத னைகளைப் புரிந் துள்ள னர்.*

*அப்படி பல்வேறு துறை களில் குறிப்பாக அரசியல், பொருளாதாரம், விளை யாட்டு, கலை, இலக்கி யம், விவசாயம், சமூக நலன், வியாபாரம், கல்வி, ஆராய்ச்சி, மனிதவள மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம் என பல் வேறு துறைகளில் சாதனை புரிந்து சரித்திரம்படைத்த 30 சாதனைப் பெண்க ளுக்கு மக்கள் முதல்வரின் மனிதநேய விழா உலக மகளிர் தின விழா - 2025 முன்னிட்டு, “சூரிய மகள்” விருது வழங்கும் விழா 01/04/2025 செவ்வாய்க்கி ழமை மாலை 4.00 மணி அளவில் சென்னை ராஜா அண்ணாமலை மன்றத் தில் நடிகர் சத்யராஜ் அவர்கள் “சூரிய மகள்” விருது வழங்கி சிறப்பிக்கி றார்.*

*இவ்விருது வழங்கும் விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், சென்னை மாநகராட்சி மாமன்ற பெண் உறுப்பி னர்கள் அனைவரும் தவ றாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு மேயர் ஆர். பிரியா அழைப்பு விடுத் துள்ளார்.*

## முதல்வர் பிறந்த நாள் : சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமை!

# காஞ்சிபுரத்தில் இலவச கண் பரிசோதனை - கண்புரை அறுவை சிகிச்சை முகாம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்!

*காஞ்சிபுரம், மார்ச், 30,*

*காஞ்சிபுரம் மாநகராட்சி, 49 வது வார்டு சார்பில் முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்க ளின் 72 வது பிறந்த நாள் விழா வினை முன்னிட்டு சென்னை அரவிந்த் கண் மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெ ரும் முழுமையான இலவச கண் பரிசோதனை மற்றும் இல வச கண்புரை அறுவை சிகிச்சை முகாம் இன்று (30.3.2025 ஞாயிற் றுக்கிழமை) காலை 9 மணி முதல் 2 மணி வரை காதுகேளா தோர் பள்ளி, சதாவரம், காஞ் சிபுரத்தில் நடைபெறுகின்றது.*

*இம் மருத்துவ முகாமை மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார். மாநகரச் செயலா ளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமை வகிக்கிறார்.*

*இதில் சட்டமன்ற நாடாளு மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*நிகழ்ச்சிக்கான ஏற்பாட் டினை 3வது பகுதிக் கழகச் செயலாளர் அ.தசரதன், 49 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பூங்கொடி தசரதன் ஆகியோர் செய்துள்ளனர்.*



# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 30.03.2025 | சேலம் மேற்கு | சங்ககிரி | கலைஞர் சிலை அருகில், தாரமங்கலம் | நாஞ்சில் சம்பத், ம.மோகநிதி |
| 2 | 30.03.2025 | கரூர் | கிருஷ்ணராயபுரம் | வெள்ளியணை | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மு.தமதி |
| 3 | 30.03.2025 | திருப்பூர் வடக்கு | அவினாசி | ரவுண்டானா அருகில், சேவூர் | இந்திரகுமார் தேரடி, ச.நாகராஜ் |
| 4 | 30.03.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | ஊத்தங்கரை | ரவுண்டானா அருகில், நால் ரோடு | செந்தில்வேல், ர.ராஜேஷ் |
| 5 | 30.03.2025 | மதுரை வடக்கு | மேலூர் | பேருந்து நிலையம், மேலூர் | திருச்சி சிவா எம்.பி., ப.பிரசாந்த் |
| 6 | 30.03.2025 | மயிலாடுதுறை | சீர்காழி | பழைய பேருந்து நிலையம், சீர்காழி | மில்ட்டன், இரா.மதுமிதா |
| 7 | 30.03.2025 | திருப்பத்தூர் | ஆம்பூர் | ராஜீவ் காந்தி சிலை அருகில், பைபாஸ் ரோடு | மருத்துவர்.எஸ்.ஏ.எஸ்.ஹஃபீசுல்லா, மகிழவன் |
| 8 | 30.03.2025 | திருவள்ளூர் மேற்கு | திருவள்ளூர் | இரயில் நிலையம், திருவள்ளூர் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, க.ரா.சந்தியா |
| 9 | 30.03.2025 | திருவாரூர் | மன்னார்குடி | அண்ணா சிலை அருகில், வடுவூர் | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், அக்‌ஷயா |
| 10 | 30.03.2025 | காஞ்சிபுரம் வடக்கு | செங்கல்பட்டு | ஜி.எஸ்.டி.ரோடு, சிங்கபெருமாள் கோயில் | பொன்.முத்துராமலிங்கம், நா.அருண் |
| 11 | 31.03.2025 | திருப்பூர் வடக்கு | திருப்பூர் தெற்கு | சேரன் காலனி, ராக்கியாபாளையம், நல்லூர் | செந்தில்வேல், ப.விஜயராஜ் |
| 12 | 31.03.2025 | விழுப்புரம் தெற்கு | விக்கிரவாண்டி | காணை தெற்கு ஒன்றியம், கொடார் | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மு.ரோஜா |

**அன்பகம்,** சென்னை – 18.

நாள் : 28–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**

செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி